Deposition of witness
(Chapter XXIII code of Criminal Procedure)
In the court of Judicial Magistrate No.I, Tindivanam.

**CASE NO.CC. 143/2022 PW-5**

Name : திரு.ஆனந்தராசன்
Father / Husband name : முத்து
Village : ரோசணை
Age : 38
Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 this day 25.02.2026

A1 to A3 present. Defence counsel present. HC 1465 present.

<u>முதல் விசாரணை</u>

1. நான் தற்போது ரோசணை காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்துவருகிறேன். கடந்த 05.12.2021 ந்தேதி இரவு 21.30 மணிக்கு நான் நிலைய பொறுப்பில் இருந்தபோது அ.சா.1 அரிகிருஷ்ணன் என்பவர் நிலையம் ஆஜராகிகொடுத்த புகார்மனுவை பெற்று நிலைய குற்ற எண் 1095/2021 U/s 341,147,148,323,324,506(i) IPC ன் படி வழக்கு பதிவு செய்தேன். **அந்த முதல் தகவல் அறிக்கை அசாஆ 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்னர் வழக்கினை விசாரணைக்கு எடுத்துக்கொண்டு மறுநாள் காலை 7 மணிக்கு சம்பவம் இடம் சென்று சாட்சிகள் முகமதுமிரான், செந்தில்குமார் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகசர் தயார்செய்தேன். பார்வை மகசரில் சாட்சிகளிடம் கையொப்பம் பெற்று அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். **அந்த பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் அசாஆ 4 மற்றும் 5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

2. பின்னர் வழக்கின் பட்டியல் சாட்சிகள் 1 முதல் 4 வரையிலானவர்களை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் சாட்சிகளின் விசாரணையிலிருந்து சம்பவம் உண்மை என தெரியவர எதிரிகளை தேட

எதிரிகள் விழுப்புரம் மாண்புமிகு முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்றத்தில் முன்பிணை பெற்று பிணையில் சென்றுள்ளார்கள். மேலும் சாட்சிகள் விசாரணையில் அடையாளம் தெரியாத 15 நபர்கள் அடித்துவிட்டதாக கூறியதால் அவர்கள் அனைவரும் சம்பவத்தை வேடிக்கைப்பார்த்தவர்கள் என்பதால் வழக்கின் சட்டப்பிரிவுகளான U/s 341,147,148,323,324,506(i) IPC @ U/s 341,323,324,506(i) IPC ன் படி பிரிவு மாற்றம் செய்து கனம் நீதிமன்றத்திற்கு அனுப்பிவைத்தேன். **அந்தப்பிரிவு மாறுதல் அறிக்கை அ.சா.ஆ. 6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

3. பின்னர் இந்த வழக்கில் காயம்பட்ட அ.சா.1க்கு மருத்துவசிகிச்சை அளித்த உதவி மருத்துவர் சந்தானகிருஷ்ணன் அவர்களை விசாரித்து வாக்குமூலம் பெற்று காயச்சான்றிதழ் பெற்றுள்ளார். **அந்த விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்றிதழ் அசாஆ 7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்னர் வழக்கின் விசாரணையை முடித்து எதிரிகள் மீது U/s 341,323,324,506(i) IPC ன் படி குற்ற இறுதி அறிக்கை தயார் செய்து தாக்கல் செய்தேன்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. கண்ணன் எந்த போன் நெம்பர் மூலமாக நாகலட்சுமி என்வருக்கு தகவல் சொன்னார் என்று புகாரில் சொல்லவில்லை என்றால் சரிதான். பேராவூரில் காலை 7 மணிக்கு சம்பவம் நடந்ததாக புகாரில் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். புகாரில் கத்தியால் வெட்டியதாக சொல்லப்பட்டுள்ளது, ஆனால் யார் யாரை வெட்டினார்கள் என்று சொல்லவில்லை என்றால் சரிதான். புகாரில் எனது தங்கையை மூர்த்தி, ராமு ஆகியோர்கள் போன் மூலம் மிரட்டியதாக உள்ளது, எந்த போன்நெம்பர் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். புகாரில் கிளியனூர் காவல் நிலையத்தில் எந்த தேதியில் புகார் கொடுத்தார்கள் என்று சொல்லவில்லை என்றால் சரிதான். கிளியனூர் காவல் நிலையத்திற்கு சென்று மெடிக்கல் மெமோ போட்டு அதன்பிறகு சிகிச்சை எடுக்கவில்லை

என்றால் அதுபற்றி எனக்கு தெரியவில்லை.

2. புகாரின்படி மருத்துவமனைக்கு செல்லும்போது பிரச்சனையா அல்லது மருத்துவமனைக்கு சென்றுவிட்டு திரும்பும்போது பிரச்சனையா என்றால் மருத்துவமனைக்கு சென்றுவிட்டு திரும்புபோது பிரச்சனை. இவ்வழக்கின் சம்பவத்திற்கு பிறகு மருத்துவமனைக்கு சென்று சிகிச்சை எடுத்ததாக விபத்து பதிவேடு இல்லை என்றால் சரியல்ல, 11.30 மணிக்கு இவ்வழக்கின் சம்பவத்தில் ஏற்பட்டகாயத்திற்கு சிகிச்சைக்காக அ.சா.1 சென்றதாக உள்ளது. சாட்சிகள் வந்ததாக சொல்லும் வாடகைக்காரின் பதிவு எண்ணை விசாரித்து குறிப்பிடவில்லை என்றால் சரிதான். காரில் யார் யார் வந்தார்கள் என்று புகாரில் சொல்லவில்லை என்றால் சரிதான். கையில் கத்தியுடன் எந்த எதிரி மிரட்டினார் என்று புகாரில் சொல்லவில்லை என்றால் சரிதான். அ.சா.1 யும் அவரின் மகனையும் யார் கன்னத்தில் அடித்து காயப்படுத்தினார்கள் என்று புகாரில் இல்லை என்றால் சரிதான்.

3. வாடகைக்காரின் ஓட்டுநரை இந்த வழக்கில் சாட்சியாக சேர்க்கவில்லை என்றால் சரிதான். கிளியனூர் காவல் நிலையத்தில் மனுரசீதை புகார்தாரர் என்னிடம் கொடுக்கவில்லை என்றால் சரிதான். சாட்சிகள் மேல்சிகிச்சை எடுத்துக்கொண்டதாக ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அ.சா.1 ஐ உதயபிரகாஷ் என்பவர் மருத்துவமனைக்கு அழைத்துச்சென்றதாக விபத்து பதிவேட்டில் உள்ளது, உதயபிரகாசை இந்த வழக்கில் விசாரிக்கவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கு சம்பவம் எத்தனை மணிக்கு நடந்தது என்று புகாரிலும் எனது விசாரணையிலும் சொல்லவில்லை என்றால் சரிதான். சிகிச்சைக்கு மருத்துவமனைக்கு சென்றபோது அ.சா.1 ஐ கத்தியால் தாக்கியதாக சொல்லவில்லை என்றால் சரிதான். சாட்சி நாகலட்சுமி எனது விசாரணையில் பகல் 12 மணிக்கு சம்பவம் நடந்ததாக நேரம் சொல்லவில்லை என்றால் சரிதான். உறவினர்களுக்குள் ஏற்பட்ட மனகசப்பால் கொடுக்கப்பட்ட பொய்யான புகார்,

சொன்ன நேரத்தில் சொன்ன சமயத்தில் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல. 05.12.2021 அன்று பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கை 20.01.2022 அன்று 40 நாட்கள் காலதாமதமாக நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

**நீதிமன்ற கேள்வி** - இந்த வழக்கின் சம்பவத்தில் அ.சா.1வுடன் யார் யார் இருந்ததாக புகாரில் உள்ளது என்றால் பெயர் குறிப்பிட்டு சொல்லவில்லை. எனது விசாரணையில் அ.சா.1 அவருடன் சம்பவ சமயத்தில் யார் இருந்தார்கள் என்று சொல்லியுள்ளார்களா என்றால் அவரின் தங்கை நாகலட்சுமி வந்ததாக சொல்லியுள்ளார். எனது விசாரணையின்பேரில் சம்பவம் நடந்த நேரம் என்ன என்றால் காலை 09.30 மணி. புகாரில் கீழே இருந்து மேலே 10வது வரியில் அ.சா.1 மற்றும் அவரின் மகனையும் இடது கன்னத்தில் அடித்து காயப்படுத்தினார், கீழே இருந்து மேலாக 4வது வரியில் அ.சா.1 மற்றும் அவரின் மகனின் சட்டையும் கிழித்தார்கள் என்று உள்ளது என்றால் சரிதான். அ.சா.1 ன் மகன் பெயர் என்ன என்றால் வேதபிரகாஷ். வேதபிரகாஷ் என்பவரை விசாரித்துள்ளேனா என்றால் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளேன். வேதபிரகாசை விசாரித்ததாக சாட்சிப்பட்டியலில் இணைத்துள்ளேனா என்றால் இல்லை, அவரது வாக்குமூலம் சிடிபைலில் உள்ளது. வேதபிரகாஷ் என்பவரை ஏன் சாட்சிப்பட்டியலில் சேர்க்கவில்லை என்றால் விசாரணை செய்தேன், சாட்சிப்பட்டியலில் தவறுதலாக தட்டச்சு செய்யப்பட்டுள்ளது. நாகலட்சுமி மகள் சரண்யா என்பவரை இந்த வழக்கில் சாட்சியாக சேர்த்துள்ளேனா என்றால் இல்லை. நாகலட்சுமி மகள் சரண்யா சம்பவ சமயத்தில் இவ்வழக்கின் சம்பவ சமயத்தில் இருந்தாரா என்றால் இல்லை. புகாரில் முதல்பக்கத்தில் கீழே இருந்து மேலாக 3வது வரியில் அசா.1ன் தங்கை மகளையும் ஆபாசமாக திட்டினார்கள் என உள்ளது, மேற்படி அ.சா.1 ன் தங்கை மகளை சாட்சியாக விசாரித்தேனா என்றால் இல்லை, அதுமுதல் சம்பவம்,

அதுதொடர்பாக கிளியனூர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்துள்ளார்கள். முதல் சம்பவத்தின்போது யார் யார் இருந்தார்கள் என்றால் அரிகிருஷ்ணன், அவரின் தங்கை நாகலட்சுமி, நாகலட்சுமியின் மகள் சரண்யா ஆகியோர் இருந்தார்கள். இரண்டாவது சம்பவத்தில் மருத்துவமனையிலிருந்து திரும்பிவரும்வழியில் யார் யார் இருந்தார்கள் என்றால் அரிகிருஷ்ணன், அவரின் தங்கை நாகலட்சுமி, அவரின் மகன் வேதபிரகாஷ் ஆகியோர் இருந்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

வேதபிரகாஷ்க்கு காயம்பட்டதாக விபத்து பதிவேடு இல்லை என்றால் சரிதான். அவரின் கிழிந்த சட்டையை என்னிடம் ஆஜர் செய்யவில்லை என்றால் சரிதான். சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் வேதபிரகாஷ்க்கு காயம் ஏற்படவில்லை, அதனால் தான் அவர் சிகிச்சை எடுக்கவில்லை என்றால் சரியல்ல. அசா1 க்கு எத்தனை மகன்கள் இருக்கிறார்கள் என்று விசாரிக்கவில்லை என்றால் சரிதான். வேதபிரகாஷ் அ.சா.1 வுடன் வந்திருந்தால் புகாரில் அதனை குறிப்பிட்டு சொல்லியிருப்பார் என்றால் சரியல்ல.

/ திறந்த நீதி மன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால்
தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அதை தட்டச்சரால் தட்டச்சு
செய்யப்பட்டு பின்பு அவருக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு
அவர் சரி என்று ஒப்புக்கொண்டவுடன் என்
முன்பாக கையொப்பமிட்டார்//

நீதித்துறை நடுவர் எண். 1 , திண்டிவனம்.